
5 Years

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடத்தப்பட்டு 5 வருடங்கள்: இன்னும் நீதிக்காக காத்திருப்பு

சமூக அரசியல் - பொருளாதாரம் மற்றும் சட்டரீதியான கண்ணோட்டம்





Centre for Society and Religion
Research Group



# நிறைவேற்றுச் சுருக்கம்

2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி மூன்று கிறிஸ்தவ தேவாலயங்கள், மூன்று ஆடம்பர ஹோட்டல்கள், ஒரு விருந்தகம் மற்றும் குடியிருப்பை இலக்குவைத்து நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை, யுத்தத்திற்கு பின்னர் நாட்டில் நடத்தப்பட்ட மிகக் கொடூரமான படுகொலையாக ,னங்காணலாம். கடவுள் முன் மண்டியிட்டு பிரார்த்தித்துக் கொண்டிருந்த நூற்றுக்கணக்கான வழிபாட்டாளர்களும், உயிர்த்த ஞாயிறை முன்னிட்டு தமது காலை உணவை இரசித்து உண்டுகொண்டிருந்த பலரது உயிர்களும் கொடூரமாக காவுகொள்ளப்பட்டன. பலர் உடல் ரீதியாகவும் உணர்வு ரீதியாகவும் கடுமையான காயங்களுக்கு உள்ளாகினர். எண்ணிக்கை ரீதியாக பார்த்தால், இந்த தாக்குதல் சுமார் 315 பேரின் உயிரை பறித்ததோடு, சுமார் 600 பேர் காயமடைந்தனர். அவர்களில் 45 குழந்தைகள் மற்றும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 40 வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளும் உயிரிழந்தமையானது, இந்த சோகத்தின் மீதான சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்தது. தாக்குதலில் இருந்து தப்பியவர்கள் பலர் இன்னும் மருத்துவ சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சைகளைப் பெறுகின்றனர். இந்த கொடூரமான அனுபவத்தினால் ஏற்பட்ட அதிர்ச்சிக்குப் பின்னரான மன அழுத்தப் பாதிப்பிற்கு, அவர்களுக்கு ஆலோசனை சேவைகளும் அவசியமாகின்றது. ஈஸ்டர் தாக்குதல் படுகொலையின் இருள் இலங்கையின் வரலாற்றின் ஒரு பகுதியாக எப்போதும் அழியாமல் இருக்கும். தமது அன்புக்குரியவர்களை இழந்த மக்கள் ஆழ்ந்த துக்கத்தில் ஆழ்ந்துள்ளதோடு, இந்த ஈடுசெய்ய முடியாத இழப்பிற்கு நீதி கோரி நிற்கின்றனர். 2024ஆம் ஆண்டு, ஏப்ரல் 21ஆம் திகதி நிலைவரப்படி, இந்த தாக்குதல்கள் நடத்தப்பட்டு 5 வருடங்கள் பூர்த்தியாகின்றன. எனினும், இதற்கான நீதி இன்னும் நிலைநாட்டப்படவில்லை மற்றும் பாதிக்கப்பட்ட அனைவரும் இதற்கான தீர்வை நாடி நிற்கின்றனர்.







தாக்குதல்கள் நடத்தப்பட்ட மறுநாள், சஹ்ரான் ஹாசிம் தலைமையிலான தேசிய தௌஹீத் ஜமாத் என்ற இஸ்லாமியக் குழுவே இதற்கு காரணம் என தாம் நம்புவதாக இலங்கை அதிகாரிகள் குறிப்பிட்டனர். தாக்குதலின் பின்னணியின் உள்ள ஒரு முக்கிய குழுவாக தேசிய தௌஹீத் ஜமாத் இயக்கம் உள்ளதாக நம்பப்படுவதாக, தாக்குதல் நடத்தப்பட்ட வாரத்தின் பிற்பகுதியில் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார். அத்தோடு, தாக்குதலில் அவர்கள் பங்களித்துள்ளதாக தேசிய தௌஹீத் ஜமாத் மற்றும் ஜமாத்தே மில்லத்து இப்ராஹிம் ஆகிய அமைப்புகளுக்கு தடைவிதிக்கப்பட்டது. எவ்வாறாயினும், தாக்குதல்களுக்கு காரணமானவர்கள் பற்றி கதைக்கும்போது, இலங்கை அரசின் பாதுகாப்பு தோல்வியின் விளைவே உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் என்பதை கருத்திற்கொள்ள

வேண்டியது அவசியம் . குண்டுவெடிப்பு பற்றிய உண்மை மறைக்கப்படுவதாக கத்தோலிக்க திருச்சபை மற்றும் மனித உரிமை காப்பாளர்கள் உட்பட பலர் கருதுகின்றனர். தீவிரவாதக் குழுக்களை உளவுப் பிரிவுகள் நீண்ட காலமாக அறிந்திருந்ததாகவும், தேவாலயங்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து முன்னறிவிப்புகளை பெற்றதாகவும் தகவல்கள் வெளியாகின. உயர் அதிகாரிகளுக்கும் இது தெரியும். மேலும், இராணுவப் புலனாய்வுப் பிரிவுகளுக்கும் வேறு சில சந்தேக நபர்களுக்கும் இடையிலான விபரிக்க முடியாத தொடர்புகளும் வெளிப்படுத்தப்பட்டன. தாக்குதல்கள் தொடர்பாக அலட்சியப்படுத்தப்பட்ட எச்சரிக்கைகள், தாக்குதல்களை தடையின்றி நடத்தியமை மற்றும் நீதியை வழங்குவதில் அரசாங்கத்தின் மெத்தனமான அணுகுமுறை ஆகியவற்றை பார்க்கும்போது, தாக்குதல்களுக்குப் பின்னால் உண்மையாக செயற்பட்டவர்கள் யார் என்ற கேள்வி எழுகின்றது. அண்மையில் சனல் 4 வெளியிட்ட ஒரு ஆவணப்படத்தில், ஒரு மூத்த அதிகாரியின் முக்கியத்துவத்தையும், ராஜபக்' அரசாங்கத்துடனான அவரது தொடர்பையும் எடுத்துக்காட்டுகின்றது. எனினும், அதில் முன்வைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் மேலதிக விசாரணைகள் அவசியம். அந்த நேரத்தில் நாட்டில் நிலவிய அரசியல் ஸ்திரமற்ற தன்மையும், தாக்குதல்களுக்கு பங்களித்திருக்கக்கூடிய மற்றொரு காரணியாகும். அரசியலமைப்புச் சதியின் தோல்வியை தொடர்ந்து அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் அப்போதைய பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிற்கும் இடையில் நிலவிய பலவீனமான உறவு, நாட்டின் தேசிய பாதுகாப்பை பலவீனப்படுத்தியதுடன், சட்டவிரோத செயற்பாடுகள் ,டம்பெறவும் வழிவகுத்தது. குற்றவாளிகள் சுதந்திரமாக இருக்கும் அதே சந்தர்ப்பத்தில், பாதிக்கப்பட்டவர்கள், தப்பிப்பிழைத்தவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் தொடர்ந்து துன்பத்தை அனுபவிப்பதோடு, அவர்களின் முகங்கள் வெறுமை மற்றும் சோகத்தால் நிரம்பியுள்ளன. தாக்குதல்களின் பின்னணியில் காணப்படும் உண்மையை வெளிக்கொண்டுவர உதவுவதற்காக, நம்பகமான சர்வதேச அமைப்புகளுடன் இணைந்து பணியாற்றுவதற்கான முயற்சிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியை நாடும் போது, இரண்டு இஸ்லாமிய குழுக்களுடன் தொடர்புடைய பல நபர்களை அரசாங்கம் கைது செய்தது. ஆனால், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோர் மாத்திரமே குற்றவியல் அலட்சியத்திற்காக கைது செய்யப்பட்ட அரச அதிகாரிகளாவர். எனினும், அவர்கள் இருவரும் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டுள்ளனர். தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் உயிர் பிழைத்தவர்களுக்கும் நிதியுதவி வழங்கப்பட்டது. குற்றங்களின் தீவிரம் மற்றும் உயிர் பிழைத்தவர்களின் கணிசமான எண்ணிக்கை, பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் மற்றும் பாதிக்கப்பட்ட சமூகங்கள் ஆகியவற்றின் தீவிரத்தை கருத்திற்கொள்ளும்போது, சித்திரவதைக்கு ஆளானவர்களுக்கு உச்ச நீதிமன்றம் வழங்கிய முந்தைய இழப்பீடுகளுடன் ஒப்பிடுகையில், இதற்கு வழங்கப்படும் இழப்பீடு ஒப்பீட்டளவில் குறைவாக இருப்பதை நாம் அவதானிக்கின்றோம். இதற்கு மேலதிகமாக, இழப்பீட்டு செயற்பாட்டில் பல அரசு சாரா நிறுவனங்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. குறிப்பாக, பாதிக்கப்பட்டவர்களின் மருத்துவ தேவைகளுக்கு உதவுகின்றன மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையை அடைய உதவுகின்றன. மேலும், உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய பல வழக்குகள் நீதிமன்றில் தொடரப்பட்டுள்ளன. சுமார் 35 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ள போதிலும், பெரும்பாலான வழக்குகள், விசாரணையின் ஆரம்ப கட்டத்திலேயே உள்ளன. இந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு 12 முக்கிய வழக்குகளை சமூக சமய நடுநிலையம் உன்னிப்பாக கண்காணித்து வருகின்றது.

| வழக்கு எண் மற்றும் நீதிமன்றம் | சுருக்கம் | கடைசி விசாரணை | அடுத்த விசாரணை |
|---|---|---|---|
| HC (TAB) 2972/21<br>கொழும்பு மேல் நீதிமன்றம் | <u>*குற்றஞ்சாட்டப்பட்ட 25 பேர் மீதான பிரதான குற்றவியல் வழக்கு*</u><br><br>*உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதலுக்கு சதி செய்தமை, அதற்கு உதவியமை, உள்ளிட்ட 23,270 குற்றச்சாட்டுகளின் கீழ் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.*<br><br>*தற்போது, விசாரணையின் ஆரம்ப கட்டத்தில் இந்த வழக்கு உள்ளது* | மார்ச் 27ஆம் மற்றும் 28ஆம் திகதி 2024 | ஏப்ரல் 30ஆம் மற்றும் மே 2ஆம் திகதி 2024 |
| HC (TAB) 2900/21<br>HC (TAB) 2 899/21<br>கொழும்பு மேல் நீதிமன்றம் | <u>ஈஸ்டர் தாக்குதல்களை தடுக்கத் தவறிய குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் பொலிஸ் மா அதிபர் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு</u><br><br>உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை தடுக்கத் தவறியமை மற்றும் கடமைகளை புறக்கணித்தமைக்காக முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ ஆகியோர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. அவர்களின் தரப்பு வாதத்தை கேட்காமலேயே அவர்களை விடுதலை செய்யுமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதாயம் (Trial-at-Bar) உத்தரவிட்டது. உயர் நீதிமன்றத்தில் இந்த வழக்கு மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளதோடு. இது தொடர்பான தீர்ப்பு தற்போது நிலுவையில் உள்ளதுகாயத்தை ஏற்படுத்திய குற்றவியல் தண்டனைச் சட்டக் குற்றத்துடன் இது தொடர்புடையது. ரிட் வழக்கின் உத்தரவு கிடைக்கும்வரை, தற்போது இந்த வழக்கு நிறுத்திவைக்கப்பட்டுள்ளது | செப்டெம்பர் 8ஆம் திகதி 2023 | - |

| | | | |
|---|---|---|---|
| உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான 12 அடிப்படை உரிமை மனுக்கள் மீதான விசாாணை<br><br>உயர் நீதிமன்றம் | உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலை தடுத்து நிறுத்த தவறியவர்களுக்கு எதிராக 12 அடிப்படை உரிமைகள் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.<br><br>தாக்குதல் பற்றிய நம்பகமான தகவல்கள் கிடைக்கப்பெற்ற போதிலும், உயிர்த்த ஞாயிறு தாக்குதலை தடுத்து நிறுத்துவதற்கு, அடிப்படை உரிமை மனுக்களில் பெயர் குறிப்பிட்டுள்ள நபர்கள் தவறியுள்ளனர் என்றும், இதன் மூலம் மனுதாரர்களின் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளனர் என்றும் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு அமைய அரசாங்கம் எடுத்த நடவடிக்கையினை reparations.gov.lk என்ற இணையத்தளத்தில் காணலாம். | நவம்பர் 2ஆம் திகதி 2023 | ஜூலை 15 ஆம் திகதி 2024 |
| HC 78/2021<br>புத்தளம் மேல் நீதிமன்றம் | ஹெஜாஸ் ஹிஸ்புல்லா மற்றும் ஏனையோருக்கு எதிரான வழக்கு<br><br>உயிர்த்த ஞாயிறு குண்டுதாரிகளில் ஒருவருடன் தொடர்பு வைத்திருந்த சேவ் தி பேர்ல்ஸ் தொண்டு நிறுவனத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் வழக்கறிஞர் ஹெஜாஸ் ஹிஸ்புல்லாவுக்கு எதிரான வழக்கு இதுவாகும். தற்போது இந்த வழக்கு விசாரணையில் உள்ளது. எனினும், ஹெஜாஸிற்கு எதிரான சாட்சிகள் பலவீனமாக உள்ளன. | மார்ச் 1ஆம் திகதி 2024 | மே 17ஆம் திகதி 2024 |

| | | | |
|---|---|---|---|
| 23084/22<br>கோட்டை நீதவான் நீதிம-ன்றம் | <u>மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக தனிப்பட்ட முறைப்பாடு</u><br><br>அலட்சியத்தால் மரணம் மற்றும்.'.அல்லது கடுமையான காயத்தை ஏற்படுத்திய குற்றவியல் தண்டனைச் சட்டக் குற்றத்துடன் இது தொடர்புடையது. ரிட் வழக்கின் உத்தரவு கிடைக்கும்வரை, தற்போது இந்த வழக்கு நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. | மார்ச் 17ஆம் திகதி 2023 | |
| Writ 354/22<br>மேன்முறையீட்டு நீதிமன்றம் | <u>முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் தாக்கல் செய்யப்பட்டது</u><br><br>2022ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 14ஆம் திகதி கோட்டை நீதவான் நீதிமன்றில் ஆஜராகுமாறு நீதவான் நீதிமன்றத்தினால் விடுக்கப்பட்ட அழைப்பாணை சட்டவிரோதமானது, செல்லுபடியற்றது மற்றும் சட்டரீதியான விளைவைக் கொண்டிருக்கவில்லை என குற்றஞ்சாட்டப்பட்டு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. தற்போது இந்த விடயம் அடுத்த திகதியில் விசாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. | பெப்ரவரி 07ஆம் தி-கதி 2024 | மே 14ஆம் தி-கதி 2024 |
| | | | |

| | | | |
|---|---|---|---|
| TAB 4485/21<br>கேகாலை மேல் நீதிமன்றம | மாவனெல்ல பகுதியில் புத்தர் சிலைக்கு சேதம் விளைவிக்கப்பட்டமை குறித்த வழக்கு<br><br>பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் 16 பேருக்கு எதிராக குற்றஞ்சாட்டப்பட்டு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் இருந்து, தண்டனைச் சட்டத்தின் கீழ் குற்றங்கள் எனக் குறைக்கப்பட்ட பின்னர், குற்றம் சாட்டப்பட்ட அனைவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டனர். இந்த நாசவேலைக்கு காரணமான நபர், ஈஸ்டர் தாக்குதலின் தற்கொலை குண்டுதாரி சஹ்ரான் ஹாசிம் என பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த வழக்கு 2023ஆம் ஆண்டு ஜனவரி 18ஆம் திகதி முடிவுறுத்தப்பட்டதோடு, குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு இடைநிறுத்தப்பட்ட தண்டனைகள் வழங்கப்பட்டன. | ஜனவரி 18ஆம் திகதி 2023 | வழக்கு முடிவுறுத்தப்பட்டது |
| புத்தளம்/TAB 107/2021<br>புத்தளம் மேல் நீதிமன்றம்<br>. | வனாத்தவில்லு பயிற்சி முகாம் மற்றும் வெடிகுண்டு வழக்கு<br><br>ஈஸ்டர் தாக்குதல்களுடன் தொடர்புடைய பயிற்சி முகாம் மற்றும் வெடிபொருட்கள் வனாத்தவில்லுவில் கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பான வழக்கு இதுவாகும். வாக்குமூலம் தானாக முன்வந்து வழங்கப்பட்டதா அல்லது கட்டாயப்படுத்தப்பட்டதா (voir dire inquiry) என்பதை சரிபார்க்க மேலதிக விசாரணை நடைபெறுகின்றது | ஜனவரி 30ஆம் மற்றும் 31ஆம் திகதி 2024 | மே 28ஆம் மற்றும் 29ஆம் திகதி, ஜூன் 25ஆம், 26ஆம் மற்றும் 27ஆம் திகதி, ஜூலை 16ஆம், 17ஆம் மற்றும் 18ஆம் திகதி. |

| | | | |
|---|---|---|---|
| HC 148/2021<br>புத்தளம் மேல் நீதிமன்றம் | அஹ்னாப் ஜெசீமிற்கு எதிரான வழக்கு<br><br>இளம் கவிஞரான அஹ்னாப் ஜெசீம் மீது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் இந்த வழக்குப் பதிவு செய்யப்பட்டது. தடுத்து வைக்கப்பட்டிருந்த அஹ்னாப் 19 மாதங்களின் பின் பிணையில் விடுவிக்கப்பட்டார். மேலும், அவருக்கு எதிரான சாட்சியங்கள் இல்லாததால், கைது செய்யப்பட்ட 43 மாதங்களுக்குப் பின்னர் அவர் விடுவிக்கப்பட்டு வழக்கு முடிவுறுத்தப்பட்டது. | | |
| 16235/MR<br>நீர்கொழும்பு மாவட்ட நீதிமன்றம் | சிவில் வழக்குகள்<br><br>உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காரணமாக ஏற்பட்ட சேதங்களை மீட்டெடுப்பதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு தற்போது முன்விசாரணை கட்டத்தில் உள்ளது. | பெப்ரவரி 02ஆம் திகதி 2024 | ஜூன் 28ஆம் திகதி 2024 |
| Writ 143/24<br>மேன்முறையீட்டு நீதிமன்றம் | சமூக சமய நடுநிலையம், அதன் பணிப்பாளர் மற்றும் பாதிக்கப்பட்டவரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு<br><br>இது சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிலந்த ஜயவர்தனவுக்கு எதிராக குற்றவியல் விசாரணைகள் மற்றும் நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறு பொலிஸ் மா அதிபர் மற்றும் சட்டமா அதிபருக்கு அறிவுறுத்தும், செயலுறுத்தும் நீதிப்பேராணைகளை (Mandamus writs) நாடியுள்ளது. வழக்கு தொடர்பான கூடுதல் நடவடிக்கைக்காக, 2024 மே 28ஆம் திகதியன்று மறுபரிசீலனை செய்யப்படும். | மார்ச் 27ஆம் திகதி 2024 | மே 28ஆம் திகதி 2024 |

| | | | |
|---|---|---|---|
| CA RTI/11/2023<br>மேன்முறையீட்டு நீதிமன்றம் | <u>பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சிற்கு எதிரான தகவல் அறியும் உரிமை வழக்கு</u><br><br>உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான தவறுகளுக்காக தற்போதைய பொலிஸ் மா அதிபர் உட்பட சில பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கைகள் பற்றிய தகவல்களை கோரி, முதற்கட்டமாக தகவல் அறியும் உரிமை கோரிக்கையொன்றை சமூக சமய நடுநிலையம் தாக்கல் செய்தது. தற்போது இது தொடர்பான வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளதோடுபிரதிவாதி நீதிமன்றில் முன்னிலையாக வேண்டும் | மார்ச் 05ஆம் திகதி 2024 | ஜூன் 14ஆம் திகதி 2024 |

*இதுபற்றிய விரிவான அட்டவணை பின்வரும் அறிக்கையில் உள்ளது: சமூக சமய நடுநிலையம். "உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக 11 முக்கிய நீதிமன்ற வழக்குகளின் முக்கிய விபரம் (2021 ஜனவரி 1ஆம் திகதி - ஜூன் 21ஆம் திகதி)." சமூக சமய நடுநிலையம்இ 2023 ஜூன் 21ஆம் திகதி. https://easterattack.info/csr-reports/.

அரசியல் சூழல், பாதிக்கப்பட்ட சிலரைப் பற்றிய விபரங்கள், சமூக-கலாச்சார மற்றும் பொருளாதார பாதிப்புகள் பற்றிய கலந்துரையாடல்கள், சட்ட வாதங்கள் பற்றிய புதுப்பிப்புகள் மற்றும் நீதி நிலைநாட்டப்படாமை பற்றிய பகுப்பாய்வு உள்ளிட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் பற்றிய கண்ணோட்டத்தை இந்த அறிக்கை வழங்குகிறது.

1“Sri Lanka Attacks: What We Know about the Easter Bombings.” BBC News, BBC, 28 Apr. 2019, www.bbc.com/news/world-asia-48010697.

2“Written statement* submitted by Franciscans International, a non-governmental organization in general consultative status.” United Nations, 5 Feb. 2024.

3“Sri Lanka Attacks: What We Know about the Easter Bombings.” BBC News, BBC, 28 Apr. 2019, www.bbc.com/news/world-asia-48010697.

4VOA News. “Sri Lankan Police Enter HQ of Group Blamed for Easter Attacks.” Voice of America, 28 Apr. 2019, www.voanews.com/a/sri-lankan-police-enter-hq-of-group-blamed-for-easter-attacks/4894829.html.

5 “After Sri Lanka’s Easter Bombings: Reducing Risks of Future Violence.” Crisis Group, 17 Feb. 2021, www.crisisgroup.org/asia/south-asia/sri-lanka/302-after-sri-lankas-easter-bombings-reducing-risks-future-violence.

6 Sri Lanka Brief. “Easter Sunday Attacks in Sri Lanka: Accountability, Justice, and the Deep State.” Sri Lanka Briefing Notes, no. 24, Feb. 2022, pp. 3–24, https://srilankabrief.org/briefing-note-easter-sunday-attacks-in-sri-lanka-accountability-justice-and-the-deep-state/.

7“CSR officially receives four most important evidence given at the Presidential Commission of Inquiry on the Easter Attacks': Further established that the security forces had prior information of the bombers.” Centre for Society and Religion, 19 Jan. 2024.

8 “SC FR 163/2019.” Supreme Court, https://www.supremecourt.lk/images/documents/sc_fr_163_2019.pdf. Accessed 28 Mar. 2024.

9 Sri Lanka Brief. “Easter Sunday Attacks in Sri Lanka: Accountability, Justice, and the Deep State.” Sri Lanka Briefing Notes, no. 24, Feb. 2022, pp. 3–24, https://srilankabrief.org/briefing-note-easter-sunday-attacks-in-sri-lanka-accountability-justice-and-the-deep-state/.

10 “Channel 4- Why Now? Why Not?”, The Island, 10 Sept 2023, https://island.lk/channel-4-why-now-why-not/

11 Radhakrishnan, R K. “Constitutional Coup.” Frontline, 10 Nov. 2018, https://frontline.thehindu.com/world-affairs/article25436345.ece

12 ‘Actions taken by or on orders made by the Supreme Court’, Office for Reparations Sri Lanka. https://reparations.gov.lk/web/index.php?option=com_content&view=article&id=153:action-taken-by-or-on-orders-made-by-the-supreme-court&catid=8:news-and-events&lang=en&Itemid=282

13 Centre for Society and Religion. “The Highlights of 11 Main Easter Attacks Court Cases (1st January 2021- 21st June 2023),” Centre for Society and Religion, 21st June 2023. https://easterattack.info/csr-reports/.



CSR
CENTRE FOR SOCIETY & RELIGION

# EA INFO

Easter Attack Info

https://easterattack.info